**PGT 4443** **வாசிப்புக் கோட்பாடுகள்** **6 HRS / 4 Cr**

**நோக்கம்:**

தமிழின் மரபான திறனாய்வு முறைகளில் மட்டுமல்லாது மேற்கில் நவீன இலக்கிய கோட்பாடுகள் வழியாகவும் தமிழிலக்கியங்களை வாசிப்பதன் மூலம் கூடுதல் புரிதல்களை அடைய முடியும். ஆதன் அடிப்படையில் நவீன இலக்கியன வாசிப்பு ளேகாட்பாடுகள் சிலவற்றின் அடிப்படையான அறிமுகங்களைப் பெறுவது இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கூறு 1: சமூகம் மையமாதல்:** மார்க்சியம் - இலக்கியம் மேல் கட்டுமானம் - பிந்தைய மார்க்சியர்கள் - ஒடுக்குமுறை அதிகாரம் பண்பாடு குறித்த கருத்துகள் (மார்க்ஸ் - டெர்ரி ஈகிள்டன் - அல்தூஸர் - கிராம்சி)

**கூறு 2: மொழி மையமாதல்:** குறி – குறிப்பான் - மொழி உருவவாதம் - அமைப்பியல் - பின் அமைப்பியல் (சசூர் - யாக்பசன் - பிராப் - பார்த்).

**கூறு 3: தனிநபர் மையமாதலும் விளிம்பும்:** அறிவுவாதம் - நவீனத்துவம் - உளவியல் - இருத்தலியல் - பின்நவீனத்துவம் - மையம், விளிம்பு – பனுவலில் அதிகாரம் குறித்த கருத்துகள் (பிராய்டு – யூங் - லியோதார்த் - லக்கான் - தெரிதா).

**கூறு 4**: **வாசகன் மையமாதலும் ஆசிரியன் மரணமும்**: பிரதி ஆசிரியன் வாசிப்பு வாசகன் - வாசகன் மையமாதல் - ஆசிரியன் மரணம் - கட்டமைப்பும் கட்டவிழ்த்தலும் - ஊடிழைப்பிரதி (சசூர் - யாக்கப்சன் - பார்த் - பூக்கோ – தெரிதா – கிறிஸ்தவா).

**கூறு 5**: காலனியமும் பின்காலனியமும்: குாலனியம் - கீழைத்தேயம் என்ற கருத்தாக்கம் - பின்காலனியம் - உள்;ர் அறிதல் முறைகளும் கதையாடல்களும் (எட்வா்ட் செய்த் - காயத்ரி ஸ்பீவக் - ஹோமிபாபா).

**பாடநூல்கள்** :

1. எம். ஜி. சுரேஷ் 'இஸங்கள் ஆயிரம்', மருதா, சென்னை. 2005.
2. எம். ஜி. சுரேஷ் 'பூக்கோ', 'பார்த்', 'லக்கான்', 'தெரிதா' (ஆகியோா் குறித்த அறிமுக நூல்கள்) அடையாளம், புத்தாநத்தம். 2009.
3. கோபிசந்த் நாரங் "அமைப்பு மையவாதம், பின்அமைப்பியல் மற்றும் கீழைக்காவிய இயல்", சாகித்திய அகாதமி, புதுதில்லி. 2006.

பார்வைநூல்கள் :


1. இ.எஸ்.டி (தொ.ஆ) "இலக்கிய இஸங்கள்" நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 1994.
2. கோ.கேசவன் "இலக்கிய விமா்சனம் - ஒரு மாா்க்சிய பாா்வை" அன்னம், சிவகங்கை. 1984.
3. வ.கீதா, எஸ்.வி.ராஜதுரை "கிராம்ஷி : புராட்சியின் இலக்கணம்" நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2016.
4. எம்.ஏ.நு.ஃ.மான் - மொழியிம் இலக்கியமும், காலச்சுவடு, நாகர்கோவில்.
5. தமிழவன் - அமைப்பியலும் அதன் பிறகும் அடையாளம் பதிப்பகம்.
6. க.பூரணச்சந்திரன் - அமைப்பியமும் பின் அமைப்பியமும், அடையாளம், புத்தாநத்தம், 2010.
7. எம்.டி.முத்துகுமாரசாமி – பிற்கால அமைப்பியலும் குறியியலும், தமிழ்த்துறை ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, 1988.
8. எஸ்.வி.ராஜதுரை எக்ஸிஸ்டென்ஷியலிசம், க்ரியா, சென்னை,1975.
9. பாலா – சர்ரியலிசம், அன்னம், சிவகங்கை, 1977.
10. அ.ராமசாமி – பின்னைநவீனத்துவமும் தமிழ்ச்சூழலும், தி.சு.நடராஜன் (தொ.ஆ.), விடியல், கோயம்புத்தூர், 1997.
11. எம்.ஜி.சுரேஷ் - பின்னைநவீனத்துவம் என்றால் என்ன?, அடையாளம், புத்தாநத்தம், 2009.
12. ஆ.பூமிச்செல்வம் - பின் நவீனத்துவம், அகரம், தஞ்சாவூர், 2009.
13. ந.இரத்தினக்குமார் - பின்காலனியம் பாவை, சென்னை, 2017.

PGT 5400 **தொல்லியலும் தமிழகமும்** 4Hrs/4Cr

---

**நோக்கம்**: தமிழக வரலாற்றின் அடித்தளமான தொல்லியலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி தமிழகத் தொல்லியல் களங்களைப் பார்வையிட்டுப் பயிலுதலும், தொல்லியல் கூறுகளுக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் இடையே உள்ள பொருத்தப்பாடுகளை இனங்காணுதலும் இப்பாடத்தின் நோக்கமாகும்.

கூறு 1: தொல்லியல் விளக்கம், தொல்லியலும் பிறதுறைகளும், இந்தியாவில் தொல்லியல் துறை உருவாக்கம், வளர்ச்சி, தொல்லியல் கள ஆராய்ச்சி நெறிமுறைகள், வகைகள் அகழ்வாய்வுக்களத்திற்குத் தேவையான கருவிகள், அகழ்வாய்வு நிபுணர் கடமைகள், ஆழ்கடல் அகழ்வாய்வு முறை, கரிமம் 14 காலக்கணிப்பு முறை, கல்வெட்டுக்களைப் படியெடுக்கும் முறையைப் பயிலுதல்.

கூறு 2: மட்பாண்டங்கள், பாறை ஓவியங்கள், தமிழ்நாட்டில் தொல்லியல் அகழாய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் (அத்திரம்பாக்கம், பொருந்தல், குடியம் திருத்தங்கல், டி.கல்லுப்பட்டி, பையம்பள்ளி, பல்லாவரம், ஆதிச்சநல்லூர்), வரலாற்றுத் தொடக்க காலம்

(அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டிணம், அழகன்குளம், உறையூர், கொற்கை, கொடுமணல், கீழடி) ஆகியனவற்றைத் தொல்லியல் அறிக்கைகளுடன் விளக்குதல்.

கூறு 3: தமிழ்ப்பிராமி கல்வெட்டுகள் (யானைமலை, அரிட்டாபட்டி, மாங்குளம், புகளூர், அறச்சலூர், ஜம்பை, பூலாங்குறிச்சி), அதியமானின் கற்பொரிப்புகள், நடுகல் (புலிமான் கோம்பை, தாத்தப்பட்டி), நினைவுக்கற்கள் (கோழிக்கு, ஜல்லிக்கட்டு வீரனுக்கு), நீர்நிலைக் கல்வெட்டு, உத்திரமேரூர் கல்வெட்டு, ஓலைச்சுவடிகள் (தஞ்சை சரஸ்வதி மகால்), செப்பேடுகள் (கூரம் செப்பேடு, லெய்டன் செப்பேடு, வேள்விக்குடி செப்பேடு), கோயில் கலை (தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட, சோழபுரம், மதுரை மீனாட்சியம்மன் கோயில், காஞ்சி கைலசநாதர் ஆலயம்) ஆகியனவற்றைப் பார்வையிட்டுப் பயிலுதல.

கூறு 4: சங்ககால காசுகள் (சேர, சோழ, பாண்டியர்), கிரேக்க ரோமானிய காசுகள், பல்லவர் காசுகள், பிற்கால சோழர் காசுகள், சங்ககால வாணிகம், வாணிகப் பொருட்கள் முசிறி, அலெக்சாண்டிரியா வியாபார ஒப்பந்தம், ஆகியனவற்றைத் தொல்லியல் சான்றுகளுடன் விளங்கிக் கொள்ளல்.

கூறு 5: வெளிநாட்டார் பயணக்குறிப்பு குறிப்புகள் (எரித்தரியக் கடலின் பெரிப்புளுஸ், பிளைனி தாலமி, யுவான்சுவாங், பாஹியான் பிற்காலப்பயணி மார்க்கோ போலோ குறிப்புகளில் தமிழகம், தொல்லியல் களச் சுற்றுலா செல்லுதல்.

**பாடநூல்கள்**


1. முனைவர் தி.மனோன்மணி, தொல்லியல், NCBH வெளியீடு, சென்னை, 2010.
2. பொ.இராசேந்திரன், சொ.சாந்தலிங்கம், கோயிற்கலை, NCBH வெளியீடு, சென்னை, 2012
3. கு.ராஜவேலு, ராமமூர்த்தி - தமிழ்நாட்டு தொல்லியல் அகழ்வாய்வுகள், சென்னை,1995
4. கா.ராஜன், தொல்லியல் நோக்கில் சங்ககாலம், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை 2004

**நோக்கம்**

சொந்த நிலத்திலிருந்து பல்வேறு சமூக,பொருளாதார, அரசியல் காரணங்களால் புலம் பெயர்ந்து வாழ்கிற அயலகத் தமிழர்களின் வாழ்வியலை, அவர்தம் படைப்புகளின் வாயிலாக விளங்கிக் கொள்ளுதல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கூறு: 1**

புலம்பெயர்வு – புகலிடம்: சொல்குறித்த விளக்கம் மற்றும வேறுபாடு – தமிழிலக்கியத்தில் இடம் பெயர்வு குறித்த கருத்துக்கள் - தமிழகத்திலிருந்து அயல் மாநிலங்களுக்கு நாடுகளுக்குச் சென்று மக்களின் வாழ்க்கைப்பின்புலம் - காலத்தைய தமிழர்களின் இடம் பெயர்வு – தாது வருஷப் பஞ்சம் - 1980-களில் ஈழ அரசியல் - அரசியல் மாற்றம் - உலகம் முழுவதும் ஈழத் தமிழர்கள் இடம் பெயர்ந்த வரலாற்றுப் பின்புலம் - புலம்பெயர்தல் கோட்பாட்டு உருவாக்க முயற்சி.

**கூறு: 2**

புலம்பெயர் வாழ்வைக் காட்சிப்படுத்திடும் நவீன கவிதைகள் - படைப்பாளிகள்: உறவுகள் பிரிவு/ நிலம் பறிப்பு/ சொந்த ஊர் நினைவுகள் / ஆதிவாசிகளின் போராட்டம் / மொழி இழப்பு/ மொழிப் பிரச்சினை/ நிறவேறுபாடு / வறுமை/ முலிய பாடுபொருள்களை முன்வைக்கும் படைப்புகள்.

**வ.ஐ.ச.ஜெயபாலன்-1**. ‘இலையுதிர் கால நினைவுகள்’, **2.** ‘நெடுந்தீவு ஆச்சிக்கு’

**சேரன்-1.** ‘இருகாலைகளும் ஒரு பின்னிரவும்’. 2. ‘எல்லாவற்றையும் மறந்து விடலாம்’ **மு.புஷ்பராஜன்** - ‘தனிமை’ **திருமாவளவன் -1** ‘தேடுகை’, 2. ‘மனிதர் காட்சி சாலை’, **சு.வில்வரத்தினம்** - ‘இயற்கையால் எழுதியது’/ **சுகன்-** ‘நிர்மூலமாக்கப்பட்ட பின்னானவை’/ **துஷ்யந்தன்** - ‘விழு’/ **செல்வம்-1.** ‘விசாரணை’, 2. கடிதங்களில் வாழும் மனிதர்கள்’/ **செழியன்** - ‘நிலவும் நானும்’/ **பிரிய தர்சினி** – ‘பெண்ணா ஒரு அகதி’/ **தமயந்தி**- நீ நான் நமது கனவு’/ **அர்ச்சுனா** -1. ‘ஒரு அகதி விண்ணப்பம்’, 2. ‘பனித்துளி வாழ்வு’/ **தர்மினி** –

'ஆயுதம் வைத்திருப்பவன் நாசமாய்ப் போகட்டும்'/ **மதினி** – 'புதுங்கும் பரம்பரை தொலைக்கப்பட்ட தரவுகள்'.

**கூறு:** 3

புலம் பெயர் வாழ்வைச் சித்திரிக்கும் சிறுகதைப் படைப்புகள் படைப்பாளிகள்: அகதி படும்பாடு/ அகத்தனிமை/ புலம்பெயர்ந்த நிலத்தில் பெண்களின் நிலை மொழிப்பிரச்சினை முதலான பாடுபொருள்கள்..

**அ.முத்துலிங்கம்** - கொழுத்தாடு பிடிப்பேன், ஓ அமெரிக்க காரி **பிரேம் ரமேஷ்-** பேசப்படாத பூக்களுக்கு இனி மௌனங்களும் இல்லை, **ஷோபாசக்தி** 1.எழுச்சி, 2. **லைலாபொ.கருணாகரமூர்த்தி-** ஒரு அகதி உருவாகும் நேரம், **சை.பீர்முகமது** வெடித்த துப்பாக்கிகள், **நா.கோவிந்தசாமி** மதிப்பீடுகள் **சயந்தன்** -தமிழ் டைகர் பிறீடம் பைட்டர்ஸ், **விவேக்** -சிறை மீட்பு.

கூறு: 4

புலம் பெயர் வாழ்வைச் சித்திரித்திடும் நாவல் இலக்கியமும்-படைப்பாளிகளும்: தேயிலைத் தோட்டமும், தமிழர்களும்/தலைமுறை இடைவெளி/அயலகத்தில் தமிழர்களும் அவர்களின் அந்நியமாதல் நிலைமையும்/ அலைக்கழிக்கப்படும் அகதி வழ்வு/ முதலான பாடுபொருள்கள்.

**அன்பர் பாலசிங்கம்-** செந்நீர்/ **குணா கவியழகன்-** கர்ப்ப நிலம் / **சுப்ர பாரதிமணியன்** - சுடுமணல் / **சயந்தன்** - ஆறாவடு-/ **வி.ஜீவகுமாரன்** -கடவுச்சீட்டு/ சண்முகம் -சாயம் மரண ரயில்.

**கூறு:** 5

புலம் பெயர் வாழ்வும் புனைவற்ற எழுத்துக்களும்: கட்டுரைகள் - பத்திகள் - ஆவணங்கள்

**பொ.கருணாகரமூர்த்தி** 1. அப்ப நீ பூ விக்கலையா? 2. அந்த சைத்தான் இப்போ இதுக்குள்ள நிக்குது. **இரத்தின் வெங்கடேசன்** - தமிழர் புலம்பெயர்வும் வாழ்வியலும்/ வரலாறும்/ **ஆ.சந்திரசேகரன்** - மலேசியத் தமிழர்களின் வாழ்வியல் நிலை/ **அல்பிரட் வேந்தர்கோன்** - ஐக்கிய இராச்சியத்தில் தமிழரின் வாழ்வியல்/ **பாமல்லன்** - பிரான்சுத் தமிழர் வரலாறும் வாழ்வியலும் **எழில் வசந்தன்** -புதுச்சேரித் தமிழர்கள் புலம்பெயர்ந்த வரலாறு/ **எம்.ஐ.எம்.ஹனிபா** –கனடத் தமிழர்களின் வாழ்வியல்/ **செ.யோகராசா** – நார்வேத் தமிழர் வரலாறும் வாழ்வியலும்/ **ஏ.காருண்யாள்** - மொரிசியசு தீவில் தமிழர் வாழ்வியல்/ **இளைய அப்துல்லாஹா** 1. அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன். 2.இங்க ஒவ்வொரு நாளும் நடக்கிறத பாத்தா ஊரோட போயிரலாம் போல இருக்கு. 3.அகதிகளின் அல்லாட்டம்/ **எச்.பீர்முஹமது** 1.கீழைநாடுகளும் புலப்பெயர்வும் 2.புலம்பெயர்தலின் வலிகள் டயஸ்போரா சமூகங்கள் குறித்து **தொ.பத்தினாதன்** -தமிழகத்தின் ஈழ அகதிகள்

**ஆவணப்படம்**: சாயாம் மரண இரயில் / **திரைப்படம்**: பரதேசி

**பாடநூல்**

துறை வெளியீடு (தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களிலிருந்து பாடப்பகுதிகளுக்கான நகல்கள்)

| PGT-4300 | **அரங்கக்கலை** | 4 Hr/3Cr |
| --- | --- | --- |

**நோக்கம்**

அரங்கக்கலையை செயல்முறையாக அனுகுவதன் மூலம் நாடக்கலையின் நுட்பங்களை அறிமுகப்படுத்தி, குறிப்பாக நடிகனுக்கான பயிற்சிகள் மூலம் மாணவர்தம் ஆளுமைத்திறன்களை மேம்படுத்துதல் இப்பாடத்தின் நோக்கமாக அமையும்.

**கூறு 1**: அரங்கக்கலை பற்றிய அறிமுகம் - அரங்கத்தில் நடிகன் - நடிகனுக்கான அடிப்படைத்திறன்கள் - உற்றுநோக்குதல் (Observation) – போலச்செய்தல் (Imitation) கற்பனையாற்றல் (Imagination) – ஒருமுகப்படுத்துதல் (Concentration) – உணர்வெழுச்சி (Emotion) – நம்புதல் (Beliving) – பாத்திரமாதல் (Characterization)



**கூறு 2**: குரலியக்கம் (Voice Culture) – உடலியக்கம் (body movements) – உள உடல் இயங்கியல் (phyco-physical action) – புதிதளித்தல் (improvisation)

**கூறு 3**: அன்றாட வாழ்வியல் இருந்து பாத்திரங்களை உருவாக்குதல் - நிகழ்வுகளைக் காட்சிகளாக்குதல் - குழுவாக நாடகப் பிரதிகளை உருவகாக்குதல் - பல்வகை அரங்குகள் - சூழலை அரங்கா மாற்றுதல் - சிறுபிரதிகளை பரிட்சித்துப்பார்த்தல்.

**கூறு 4**: நாடகப்பிரதியைத் தேர்வுசெய்தல் - வாசித்தல் - பாத்திரத் தேர்வு – ஒத்திகைக்கு முந்தைய, பிந்தையபணிகள் - மேடையேற்றம்.

**கூறு 5**: அரங்க வடிவமைப்பு – உடை&ஒப்பனை – ஒலி&இசை – அரங்கப்பொருட்கள் - அரங்கும் பின்னரங்கும்.

இப்பாடத்தின் அகபுறமதிப்பீடுகள் அனைத்தும் செய்முறைத் தேர்வுகாளக அமையும். தனியாகவும் குழுவாகவும் சிறு செயல்பாடுகள் மூலம் மதிப்பெண்கள் வழங்கப்பெறும். குழுவாக 10-15 நிமிடங்களுக்குள்ளாக நிகழ்த்தப்படும் நாடகங்களை மதிப்பீடுவதன் மூலம் புறமதிப்பீட்டு மதிப்பெண் வழங்கப்பெறும். நாடக நிகழ்வுக்கு 75% மும்வாய்மொழித்தேர்வுக்கு 25% வழங்கப்பெறும்.

**பாடல நூல்**

துறை வெளியீடு (தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களிலிருந்து பாடப்பகுதிகளுக்கான நகல்கள்)

**பார்வை நூல்கள்:**


1. கான்ஸ்தந்தீன்ஸ்தானிஸ்லாவ்ஸ்கி – ஒரு நடிகன் உருவாகிறார், கண்ணதாசன் பதிப்பகம்,2011.
2. Dr. Ambika Kameshwar – Theater Art for Holistic Deveopment, Rasa Publication, 2006.

நோக்கம்:

வெகுசனகாட்சி ஊடகங்களான தொலைக்காட்சி, திரைப்படங்களுக்குமாற்றாக 21-ஆம் நூற்றாண்டில் செல்வாக்குப் பெற்றுவரும் காணொலிகள் (Video), குறும்படங்கள் (Short Films), மற்றும ஆவணப்படங்கள் (Documentaries) ஆகியனவற்றின் இயல்பு, செயல்படும் விதம், ஆக்கபூர்வமான சமூகமாற்றத்தில் அவற்றின் பங்களிப்பு ஆகியனவற்றை அறிமுகம் செய்து, அவ்வூடகங்களைக் கையாள்வற்கான சாத்திய கூறுகளை அறிமுகப்படுத்துவது இப்பாடத்தின் நோக்கமாகும்.

கூறு 1: இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அறிமுகமாகி செல்வாக்குப் பெற்றவரும் புதிய ஊடகங்கள் (நேற ஆநனயை) அவற்றின் இயங்குதளங்கள், செயல்பாடுகள் - பொதுவெளியிலும் இணைய வெளியிலும் அதன் தாக்கங்கள்- அவற்றின் பொருளியல் சார்ந்த இயங்குமுறைகள் - சட்டவிதிகளும், சுதந்திரமும்.

கூறு 2: காணொளிகளின் (ஏனைநழ) எளிமை - கற்றல் கற்பித்தலில் அதன் பங்கு - கலைமற்றும் சமூக மேம்பாட்டில் அவ்வூடங்களின் குறிப்பிடத்தகுந்தபங்களிப்புகள் - சான்றுகள்.

கூறு 3: குறும்படங்கள் - உலகளாவிய, இந்திய மற்றும் தமிழ்ச்சூழலில் அவற்றின் வீச்சு – வாய்ப்புகள் - சான்றுகள்.

கூறு 4: ஆவணப்படங்கள் அறிமுகம் - விழிப்புணர்வு, மேம்பாடு, சமூகமாற்றம் ஆகியன முன்னெடுக்கப்பட்ட சூழல்களும் சாத்தியங்களும் - சான்றுகள்.

கூறு 5: மேற்கண்ட ஊடகங்களைக் கையாள்வதற்கான எளிமையான சாதனங்கள் - அவற்றைக் கையாள்வதற்கான பயிற்சிகள் - வணிக ரீதியானசாத்தியப்பாடுகள் - வேலைவாய்ப்புகள்.

இப்பாடத்தின் அகபுறத்தேர்வு முழுவதும் செய்முறையாக அமையும். தங்களுக்குத் தெரிந்த தலைப்புகளில் காணொளி தயாரித்தல், திரைப்படங்களை விமரிசித்தல், கதைகளை வாசித்தல், குறும்படங்களுக்கு திரைக்கதை எழுதுதல், தயாரித்தல், சிறு ஆவணப்படங்களை உருவாக்குதல் ஆகியவற்றில் தங்களுக்கு உகந்தவற்றில் செய்யும் பங்களிப்பைக்கொண்டு அகமதிப்பீகள் கணிக்கப்பெறும். புறமதிப்பீட்டுத் தேர்வுக்கு 5% நிமிடங்களுக்குள்ளான ஒரு காணொளி/ ஆவணப்படம்/ குறுபடம்/ விளக்கப்படம் ஏதாவதொன்றைக் குழுவாகத் தயாரித்தளிக்கவேண்டும். தயாரிப்பிற்கு 75 மதிப்பெண்களும் நேர்முக உரையாடலுக்கு 25% மதிப்பெண்களும் வழங்கப்பெறும்.

**பாடல நூல்**

துறை வெளியீடு (தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களிலிருந்து பாடப்பகுதிகளுக்கான நகல்கள்)

**பார்வை நூல்கள்:**

1. க.பூர்ணசந்திரன் - தொடர்பியல் சமூகம் வாழ்க்கை, அடையாளம்,2011.
2. ஆ.தனஞ்செயன் - ஆவணப்படம்: பாணிகளும் கோட்பாடுகளும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்,2012.
3. ஜெயரஞ்சினிஞானதாஸ் - கலைப்படைபாக்கமும் மாற்றுருவாக்க முன்னெடுப்புகளும், தோழமை வெளியீடு, 2010.
4. தமிழ்ஸ்டுயோ அருண் - பேசும்சித்திரங்கள், சூரியன் பதிப்பகம்,2015.

| PGT 5547 | நாட்டுப்புறவியல் | 6Hrs/5credits |
|---|---|---|

**நோக்கம்** : நாட்டுப்புற இலக்கியங்களை அறிமுகம் செய்தலும் களஆய்வின் வழியாக வழக்காறுகளைச் சேகரிக்கும் பயிற்சியினை மாணவர்களுக்கு கற்றுத்தருவதும் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**பாடத்திட்டம்** :

கூறு 1 : நாட்டுப்புறவியல் குறித்தான கருத்தாக்கங்கள் - நாட்டுப்புறவியல் நாட்டார் வழக்காற்றியல் சொற்கள் தொடர்பான விவாதங்கள் - வாய்மொழி வழக்காறுகள் - நாட்டுப்புறக்கதைகள் - நாட்டுப்புறப்பாடல்கள் - கதைப்பாடல்கள் - இயல்புகள் - பாடுபொருள் - வகைப்படுத்தலில் ஏற்படும் சிக்கல்கள் - கதை அடைவுகள் - பழமொழிகள்- விடுகதைகள் - நம்பிக்கைகள் - விளையாட்டுக்கள் - குழந்தை வழக்காறுகள் - அறிமுகம் செய்தல், சமூகத் தேவைகளை விளக்குதல்

கூறு 2 : நாட்டுப்புற நிகழ்கலைகள் - வில்லுப்பாட்டு – தெருக்கூத்து – தோற்பாவைக்கூத்து – நிகழ்த்து மரபும் - பார்வையாளர்கள் இடம்பெறும் முறை (பிளாக்பர்ன்) - இசையும் கூத்தும் (பிராஸ்கா, பிரண்டா பெக்) – வாழ்வும் புழங்கு பொருள் பண்பாடும் - கைவினைக் கலைகள் - கலைப் படைப்புகள் - மண்பாண்டக்கலை – உருவாரங்கள் செய்யும் முறை – நாட்டுப்புற உணவு

கூறு 3 : சமயத்தின் தோற்றமும் வழிபாடு தொடர்பான கருத்தாக்கங்களும் - ஆவியுலகக்கோட்பாடு – உயிரியக் கோட்பாடு – போலிப்பொருள் வழிபாடு – குலக்குறி வழிபாடு – மந்திரம், சமயம், சடங்குகள் இவற்றிற்கிடையிலான உறவுகள் - சமயத்தின் உட்கூறுகள்

கூறு 4 : நாட்டுப்புற களஆய்வு நெறிமுறைகள் - பங்கேற்பு – உற்றுநோக்கல் - வினாநிரல் - சேகரிப்பாளன் தகவலாளி உறவு – களஆய்வில் தரவுகளைச் சேகரித்தலும் ஆவணப்படுத்தலும்

கூறு 5 : நாட்டுப்புறவியலும் பிற துறைகளும் - மானிடவியல் - இலக்கியம் - சமூகவியல் - மொழியியல் - வரலாறு

**பாடநூல்கள்:**

1. தே.லூர்து 2000 **'நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள்'**,
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,
தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை.

2. தே.லூர்து 2003 **'களஆய்வு நெறிமுறைகள்'**,
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,
தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை

3. ஆறு.இராமநாதன் 1982 **'நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்'**
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

4. ஆறு.இராமநாதன் 2001 **'நாட்டுப்புறக்கலைகள் - நிகழ்த்துக்கலைகள்'**,
மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.


**பார்வை நூல்கள்:**


1. சு.சக்திவேல் 1994 **'நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு'**
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

2. ஆறு.இராமநாதன் 2005 **'நாட்டுப்புறவியல் நெறிமுறைகள்'**
மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

3. வீ.அய்யனார் 2001 **'நாட்டுப்புறக்கதைகள்'**, பதிப்புத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.21

ஆ.கி. பரந்தாமனார் - நாயக்கர் காலம்.
வை.சதாசிவ பண்டாரத்தார் - பிற்கால சோழர் வரலாறு அண்ணாமலை பல்கலைக்கழகம் - சிதம்பரம்

**TAM 1210** திரைப்பட ரசனையும் குறும்படத் தயாரிப்பும் **3 Hours/2Credit**

**நோக்கம்:**
திரைப்படக் கலையின் அடிப்படைகளை அறியச்செய்வதன் மூலம் மாணவர்களின் திரைப்பட ரசனையை மேம்படுத்தி குறும்படத்தயாரிப்பில் பங்கு பெறச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும். இதன் மூலம் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், விளம்பரங்கள் உள்ளிட்ட காட்சி ஊடகங்களில் தங்கள் ஆர்வங்களைப் பட்டை தீட்டிக் கொள்ளும் வாய்ப்பை மாணவர்கள் பெறுவர் திரைக்கலையின் அடிப்படைகள் – திரைப்படம் எனும் கூட்டுக்கலை – திரைப்படம் எனும் அறிவியல் கலை

கூறு 1. ஷாட் வகைகள் – கோணங்கள் – கேமரா அசைவுகள் – படத்தொகுப்பில் அர்த்தம் கொள்ளும் சினிமா

கூறு 2. குறும்படங்களின் தேவைகள் – வகைகள் – குறும்படங்களும் பெரும் படங்களும் வேறுபடும், ஒன்றிணையும் புள்ளிகள்

கூறு 3. சிறந்த குறும்படங்களை (உலகளவிலான மற்றும் தமிழ்) திரையிட்டு அதன் சிறப்புக்கள் தயாரிப்பு முறைகளை விவாதித்தல்

கூறு 4. குறும்படங்களுக்கான திரைக்கதையை உருவாக்குதல் – படத்தயாரிப்பின் மூன்று நிலைகள் (தயாரிப்புக்கு முன் – படப்பிடிப்பு – படப்பிடிப்புற்குப் பின்) -

கூறு 5. குறும்படத் தயாரிப்பு: மாணவர்களைக் குழுக்களாகப் பிரிந்து 5 லிருந்து 15 நிமிடங்களுக்குள்ளான படங்களைத் தயாரிக்கச் செய்வதன் மூலம் குறும்படத் தயாரிப்பு முறைகளையும் நுணுக்கங்களையும் செயல்வழிமூலம் கற்கச் செய்தல்.

இப்பாடத்தின் அகமதிப்பீட்டுத் தேர்வுகள் 50% எழுத்துத் தேர்வாகவும் 50% செய்முறைப் பயிற்சியாகவும் அமையும். புறமதிப்பீட்டுத் தேர்வு 100% செய்முறைப் பயிற்சியாக அமையும்.

பரிந்துரை நூல்கள்

1. கதை நேரம்: கதைகள் திரைக்கதைகள் (பாகம் 1 & 2): பாலுமகேந்திரா:2012: வம்சி புக்ஸ்
2. சினிமா ஓர் அற்புத மொழி: எம். சிவகுமார்: 2003: சவுத் விஷன் வெளியீடு
3. சொல்லப்படாத சினிமா: தொகுப்பு- ப. திருநாவுக்கரசு: 2004: நிழல் வெளியீடு
4. Basic Tool Kit & Resource Guide for Young Film Makers: AFI American Film Institute: 2008

**TAM1428** நாட்டுப்புற வழக்காற்றியல் **5Hours/4Credit**

**நோக்கம்:நாட்டுப்புறவியல் எனும் துறையை அறிமுகம் செய்வித்து, நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு பிணைந்துள்ள பண்பாட்டுச் செயல்பாடுகளைக் கோட்பாடுகளின் வழி புரிந்துகொள்ளச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.**

கூறு:1 நாட்டுப்புறவியல் விளக்கம் - அறிஞர்களின் கருத்துகள் - நாட்டுப்புறவியல், நாட்டுப்புறம், நாட்டார் ஆகிய சொற்களுக்கான வரையறைகள் - ஐரோப்பிய – தமிழ்ச்சூழலில் அறிஞர்களிடைய நடைபெற்ற விவாதங்கள் - வழக்காறுகள் குறித்த விளக்கங்கள் - சூழல் (Context), பாடம்(Text), இழைவு (Texture) அடிப்படையில் வழக்காறுகளை நிர்ணயம் செய்தல் - வாய்மொழி வழக்காறுகளின் இயல்புகளை அடையாளம் காட்டுதல் - வழக்காறுகளுக்கு இடையிலான தொடர்பினைச் சுட்டுதல்.

கூறு:2 வாய்மொழி இலக்கியப் பண்புகள் - பாரி-லார்டு கோட்பாடு - செவ்வியல் இலக்கியப் பண்புகள் - வாய்மொழி மற்றும் செவ்வியல் - இவை இரண்டும் இணையும் மையப்புள்ளிகள் - வேறுபடும் இடங்கள் - வாய்மொழி மரபின் தொடர்ச்சியே செவ்வியல் மரபு என்கிற விவாதம் - பாணர் - புலவர் மரபு - சங்கப் பாடல்களைச் சான்று காட்டி விளக்குதல்.

கூறு:3 நாட்டுப்புறப் பாடல்கள் - தாலாட்டு - ஒப்பாரி - குழந்தைப் பாடல்கள் முதலானவை - பழமொழிகள் - விடுகதைகள் - சூழல் அடிப்படையில் விளக்குதல்.

கூறு:4 நாட்டுப்புறக் கதைகள் - இயற்கை, தெய்வம், பேய் முதலியன பற்றிய கதைகள் - உயிரியங்கள் பற்றிய கதைகள் - அரசன், நீதி, அறம் பற்றிய கதைகள் - குடும்பம் பற்றிய கதைகள், சங்கிலித் தொடர்கதைகள் முதலானவை - நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் - பண்புகள் - வகைகள் - மதுரைவீரன் காத்தவராயன் கதைப்பாடல்களை எடுத்துக்காட்டல்.

கூறு:5 நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகள் - திருவிழாக்கள் - சடங்குகள் - நிகழ்த்தும் களம், காலம், நிகழ்த்தும் முறைகள் இவற்றிக்கிடையிலான உறவுகளை விவாதித்தல் - நாட்டுப்புற விளையாட்டுகள் - அகப்புற விளையாட்டுகள் - சமூகப் புலப்பாட்டுத் திறன் - நாட்டுப்புற மருத்துவம் - மாற்று மருத்துவ மரபுகள்.

பயன்படும் நூல்கள்


| | |
|---|---|
| தே.லூர்து | 'நாட்டார் வழக்காற்றியல் : சில அடிப்படைகள்'<br>நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை. |
| ஆறு.இராமநாதன் | 'தமிழர் கலை இலக்கிய மரபுகள்'<br>மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். |
| ஆறு.இராமநாதன் | 'நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள்'<br>தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். |
| ஆறு.இராமநாதன் | 'நாட்டுப்புறக்கலைகள்' (நிகழ்த்துக்கலைகள்)<br>மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம். |
| சு.சக்திவேல் | 'நாட்டுப்புற இயல் ஆய்வு'<br>மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். |
| சு.சண்முகசுந்தரம் | 'நாட்டுப்புற இயல்'<br>மணிவாசகர் பதிப்பகம், சென்னை. |
| சா.சைமன்ராஜ்(பதி.ஆ) | 'தமிழக நாட்டுப்புறவியல்' (வரலாறும் போக்குகளும்)<br>நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை. |
| இ.முத்தையா | 'நாட்டுப்புற மருத்துவ மந்திரச் சடங்குகள்'<br>அன்னம், சிவகங்கை. |
| இ.முத்தையா | 'நாட்டுப்புறச் சடங்குகளும் மனித உறவுகளும்'<br>அரசு பதிப்பகம், மதுரை |
| தே.ஞானசேகரன் | 'மக்கள் வாழ்வில் மந்திர சடங்குகள்'<br>பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி. |
| தே.ஞானசேகரன் | 'மந்திரம் சமயம் சடங்குகள்'<br>பார்த்திபன் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி. |
| தர்மராஜ் | 'தமிழ் நாட்டுப்புறவியல் (பெண்கள், கவிஞர்கள், தெய்வங்கள்)'<br>புலம் வெளியீடு, மதுரை. |
| வே.சரோஜா | 'மண்ணின் மணம்'<br>வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை. |
| இரா.பாலச்சந்திரன்(பதி.ஆ) | 'தமிழ்க்கதைப்பாடல்கள்'<br>சாகித்திய அகாதெமி, புதுதில்லி. |
| ஆ.சிவசுப்பிரமணியன் | 'மந்திரமும் சடங்குகளும்'<br>மக்கள் வெளியிடு, சென்னை. |
| ஆ.சிவசுப்பிரமணியன் | 'நாட்டார் வழக்காற்றியல் அரசியல்'<br>கங்கு வெளியீடு, சென்னை. |
| சேவியர் அந்தோனி | 'ஈர்ப்பு விசை' (பயன்பாட்டு நாட்டுப்புறவியல் ஆய்வுகள்)<br>வைகறைப் பதிப்பகம், திண்டுக்கல். |
| Richard. M. Dorson | **'Folklore and Folklife'**<br>University of Chicago Press, Chicago. |
| Alan Dundes | **'Interpreting Folklore'**<br>Indiana University Press, Bloomington. |

**TAM 1427** **தொல்லியலும் தமிழகமும்** 5Hrs/4Cre

**நோக்கம்:**

தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படைகளை அறியச் செய்து, தமிழகத் தொல்லியல் தரவுகளை இலக்கியத்தோடு ஒப்பிட்டு நோக்கச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும். மாணவர்களைத் தொல்லியல் களங்களைப் பார்வையிடச் செய்தலும் கல்வெட்டுப் படியெடுக்கப் பயிற்சி பெறச்செய்தலும் இப்பாடத்துள் அடங்கும்.

**கற்றலின் பயன்:**

1. தமிழகத் தொல்லியல் தரவுகளைத் தமிழ் இலக்கியத்தோடு ஒப்பீட்டு வரையறை செய்யும் திறனை மாணவா்கள் பெற்றிருப்பா். இந்தியத் தொல்லியல் துறையின் முன்னோடிகளையும் அகழாய்வு முறையினையும் அதற்குத் தேவைப்படும் கருவிகளையும் பொருட்களையும் மாணவா்கள் உற்றுநோக்கி அறிந்திருப்பா்.

2. நடுகல், முதுமக்கள், தாழிகள், மட்பாண்டங்கள், பாறை ஓவியங்கள், கல்வெட்டு, செப்பேடுகள், நாணயங்கள், ஆவணங்கள், வெளிநாட்டார் பயணக்குறிப்புகள் என வகைப்படுத்தும் திறனை மாணவா்கள் பெற்றிருப்பா்

3. தமிழகத்தில் நடந்த அகழாய்வு மூலம் வரலாற்றுக்காலத்தினை விவரிக்கும் திறனை மாணவா்கள் பெற்றிருப்பா்.

4. தொல்லியல் கூறுகளுக்கும் தமிழ் இலக்கியங்களுக்கும் இடையே உள்ள பொருத்தப்பாடுகளை மாணவா்கள் மதிப்பீடு செய்யும் திறனை பெற்றிருப்பா்.

5. தொல்லியல் களச்சுற்றுலாவின் மூலம் வரலாற்று அறிவை மாணவா்கள் விசாலப்படுத்தி தமிழக வரலாற்றின் உண்மைத்தன்மையை பொருத்திப்பாா்ப்பா்.

கூறு 1: தொல்லியல் பொருள் விளக்கம், தொல்லியலும் பிற துறைகளும், 19ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற இந்தியத் தொல்லியல் துறை முன்னோடிகள், அகழ்வாய்வு முறைகள், அகழ்வாய்விற்குப் பயன்படும் கருவிகள், பொருட்கள், அகழ்வாய்வு நிபுணா் கடமைகள், தொல் பொருளியல் காலகணிப்பு முறைகள்.

கூறு 2: பெருங்கற்காலம், நடுகற்கள், முதுமக்கள் தாழிகள், தமிழ் இலக்கியத்தில் பெருங்கற்கால எச்சங்கள், மட்பாண்டங்கள், பாறை ஓவியங்கள்.

கூறு 3: வரலாற்றுக் காலம் -கொற்கை, ஆதிச்ச நல்லூர், அழகன்குளம், கரூர், உறையூர், காவிரிப்பூம்பட்டினம், கொடுமணல் ஆகிய ஊா்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகள்,

கூறு 4: சிற்பக்கலை (சைவம் வைணவம், சமணம், பௌத்தம்) முத்திரை, கோலங்கள், ஆயுதங்கள், தமிழக கோயிற்கலை.

கூறு 5: தமிழ்ப்பிராமி கல்வெட்டுகள், செப்பேடுகள் அறிமுகம் (சின்னமனூா், லெய்டன், வேலஞ்சேரி, ஆனைமங்கலம்) நாணயங்கள் (பழந்தமிழரசா்-சேர, சோழா் பாண்டியா்)

**நோக்கம்:**

சங்க காலம் தொடங்கி மறுமலர்ச்சி காலம் வரை எழுந்துள்ள கவிதைகளை அவையெழுந்த சூழல்களோடு இணைத்து சொல்,பொருள், ஓசை, கற்பனை, உணர்வு ஆகிய பல உறுப்புகளின் கூட்டாகிய கவிதையை விளங்கச் செய்தலும், உள்ளுறை, இறைச்சி, குறிப்பு, உவமை முதலான அணிகளின் வழி கவிதையை நயக்கச் செய்தலும், படைப்பாளின் கவித்துவம் உயிராற்றலோடு வெளிப்படும் இடங்களை இனங்காணச் செய்தலும் இப்பாடத்தின் பிற நோக்கங்களாகும்.

**கற்றலின் பயன்:**

1. கவிதையின் கூறுகளை இனங்கண்டு அவை கவிதையில் பயின்று வரும் முறையையும். அழகையும் அறிந்து தெளியும் ஆற்றல் பெற்றிருப்பர்.
2. சங்கக் கவிதைகள், அறநெறிக் கவிதைகள், பக்தி கவிதைகள், தற்காலக் கவிதைகள் ஆகியவற்றின் பாடுபொருளையும், பாடிய புலவர்களின் தனித்துவத்தையும் அறிவதோடு அவற்றை எடுத்துரைக்கும் வன்மையையும் பெற்றிருப்பர்.
3. கவிதையின் பாடுபொருள் காலந்தோறும் மாறுவதற்கான காரணத்தை அறிந்து கொள்ளுதலும், அவை கவிதையில் பயின்று வரும் பாங்கினைப் புரிந்து கொள்ளுதலும் ஆகிய திறன்களை அடைந்திருப்பர்.
4. தற்காலக் கவிதை ஒன்றில் கவிதையின் அடிப்படைக் கூறுகள் பயின்று வரும் பாங்கினை அழகுற எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவராக இருப்பர்.
5. மரபுக் கவிதை தொடங்கித் தற்காலக் கவிதை வரை படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களில் கையாண்டுள்ள உத்திகளை அறிந்துகொண்டு, அவற்றதைத் தங்கள் படைப்புக்களில் பயன்படுத்தும் திறமை பெற்றவர்களாக இருப்பர்.

**கூறு–1.** சங்கக் கவிதை: தொல்காப்பியம் சுட்டும் திணைப் பாடுபாடு – திணை அடிப்படையில் பாடல்கள் தொகுக்கப் பெற்ற விவரம் – அகத்துறை, புறத்துறை ஆகியவற்றின் முக்கியத்துவம் – இயற்கையும், அழகும், மனித வாழ்வும் இயைந்திருக்கும் சங்கப் பாடல்களின் எளிமைத் தன்மை – காலங் கடந்து நிற்றலுக்கான காரணம் - செவ்வியல் பண்பு - இவற்றை முதன்மைப் படுத்துதல். தேர்வு செய்யப்பட்ட பாடல்கள் வழி இக் கூறு விளக்கம் பெறும்.
(குறுந்தொகை – 10 பாடல்கள் (திணைக்கு–2 பாடல்கள்), கலித்தொகை –3 பாடல்கள், புறநானூறு 10 பாடல்கள், முல்லைப்பாட்டு 1–25 அடிகள்).

**கூறு–2.** அறநெறிக்காலக் கவிதை : சங்கப் பாடல்களில் மென்மையாக இடம்பெற்ற அறம், சங்க மருவிய காலகட்டத்திலெழுந்த பாடல்களில் அழுத்தமாக முன்மொழியப்பட்ட பாங்கினை எடுத்துக்காட்டுதல் - தனி மனிதன், சமூகம் சார்ந்து அறங்கள் நேர்த்தியாக மொழியப் பெற்றதைச் சுட்டுதல் - தேர்வு செய்யப்பட்ட பாடல்கள் வழி இக்கூறு விளக்கப்பெறும். குறள் ( 3 அதிகாரம் - வாய்மை, இன்னா செய்யாமை, புலவி நுணுக்கம்), நாலடியார் (இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை) ஆசாரக்கோவை 15 பாடல்கள்).

**கூறு–3.** இறைநெறிக் கவிதை: பக்தி இயக்கம் தோன்றுவதற்கான சூழலைக் கூறுதல் – முந்தைய காலகட்டங்களில் சிறப்பிடம் பெற்றிருந்த வீரம், காதல், அறம் முதலான

பாடுபொருட்கள் புதிய பொருண்மையைப் பக்தி இயக்க காலகட்டத்தில் பெறுவதைச் சுட்டிக் காட்டல் - தேர்வு செய்யப்பட்ட பாடல்கள் வழி இக்கூறு விளக்கப்பெறும். (ஆண்டாள் - நாச்சியார் திருமொழி மாணிக்கவாசகர் - திருக்கோத்தும்பி, நாவுக்கரசர் - 10 பாடல்கள் ( மாசில் … நாமார்க்கும்… ).

கதைநெறிக் காலக்கவிதை: சிறு உணர்வை/ நிகழ்வொன்றைப் பாடிய சூழல் மறைந்து ஒரு கதையைத் தொடர்நிலைச் செய்யுளாகப் பாட வேண்டிய சூழல் எழுந்தமையைச் சுட்டல் - ஐம்பெருங்காப்பியம் - கம்பராமாயணம் - பெரியபுராணம், நளவெண்பா, தேம்பாவணி, சீறாப்புராணம், இரட்சண்ய யாத்திரீகம் முதலானவற்றை அறிமுகப்படுத்துதல் - கவிதையின் அழகியல் தன்மை – புலவனின் சமத்காரம் - கருத்துக்களை நயமுற எடுத்துரைக்கும் பாங்கு முதலானவற்றைத் தேர்வு செய்யப்பட்ட பாடல்கள் வழி எடுத்துக் காட்டுதல். (கம்பன் - 15 பாடல்கள், இரட்சண்ய யாத்ரீகம் – 10 பாடல்கள்.

**கூறு–4.** மீயியல்பு நெறிக் காலக் கவிதை:
தொல்காப்பியத்தில் சுட்டப் பெற்றுள்ள சில உறுப்புகள் காலகட்டத்திற்கேற்பப் புதிய கோலம் பூண்டதை எடுத்துக் கூறுதல் – சிற்றிலக்கியங்களின் வகைகளை அறிமுகம் செய்தல் - உயர்வு நவிற்சி என்ற கூறு இக்காலகட்டத்திய பாடல்களில் முதன்மையிடம் பெற்றதைத் தெளிவுபடுத்துதல் - தேர்வு செய்யப்பட்ட பாடல்களின் வழி இக்கூறு விளக்கம் பெறும். (கலிங்கத்துப் பரணி – பேய்களைப் பாடியது 15 பாடல்கள், குற்றாலக் குறவஞ்சி – நாட்டு வளம்).

**கூறு–5.** மறுமலர்ச்சிநெறிக் காலக் கவிதை: ஐரோப்பியர் வருகையினால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றம் – தனி மனித வாழ்க்கையைப் பாதித்தல் – அடிமை நாடாகப் பாரதம் மாறிய சூழலில் பாரதி முதலான கவிஞர்கள் அரசியல், விடுதலை, சமூக விடுதலை, தனி மனித விடுதலை முதலான பாடுபொருட்களை மையமிட்டுக் கவிதை வடித்ததைக் குறிப்பிடல் - பாரதி பரம்பரை – பாரதிதாசன் பரம்பரை அறிமுகம் - புதுக்கவிதை வரவு – தனி மனித மன உளைச்சல், வேலையின்மை, முதிர்கன்னியர் பிரச்சினை, காதல், கல்வி, சாதி வர்க்க முரண்பாடு முதலானவை கவிதையின் பாடு பொருள்களாக அமைந்ததைத் தேர்ந்தெடுத்த பாடல்கள் வழி சுட்டிக் காட்டுதல்.

(பாரதி : பாரத தேச மென்று …, நெஞ்சு …, விடுதலை i)கண்ணன் பாட்டு - (iii) பாதிதாசன் : அழகின் சிரிப்பு – குன்றம், (i) சித்திரச் சோலைகளே … (i), தமிழின் இனிமை (i), புதுக் கவிதைகள் : மு.மேத்தா, அப்துல் ரகுமான், நா.காமராசன் (10)).

**பார்வை நூல்கள்**

1. மது.ச.விமலானந்தன், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் I,II, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 05. முதற்பதிப்பு – 1987.

2. ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், குமரன் பதிப்பகம், சென்னை. 2006.

3. அ.ச.ஞானசம்பந்தன், அகமும் புறமும், தி.தெ.சை.சி.நூ.ப.கழகம் லிமிடெட், சென்னை, 1991.

4. தமிழண்ணல், சங்க மரபு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. 2012.

**TAM 1524** **புனைகதை** 5Hrs/5Cre

---

**நோக்கம்:**

உரைநடை மற்றும் புனைகதை இலக்கிய அடிப்படைத்தகவல்களைக் கூறி தீவிரவாசிப்பு, திறனாய்வு உள்ளிட்ட நுட்பங்களை அறிமுகம் செய்தலே இப்பாடத்தின் நோக்கமாகும். தமிழ்ப் புனைகதை இலக்கியத்தின் தோற்றப் பின்புலம், புனைகதைக் கூறுகள், திறனாய்வுப் போக்குகள் ஆகியவற்றையும் தொட்டுச் சொல்வதாக இப்பாடத்திட்டம் அமையும்.

**கற்றலின் பயன்:**

1. தமிழ் இலக்கிய உலகில் கவிதை பெற்றிருந்த செல்வாக்கை உரைநடை இலக்கியம் பெறுவதைக் காலச் சூழலோடு பொருத்திப் பார்த்து அறிந்து கொள்ளும் திறன் பெற்றிருப்பர்.
2. புனைகதை இலக்கியத்தின் கூறுகளை எற்ற பிரதிகளோடு இணைத்துப் புரிந்துகொள்ளும் திறன் பெறுவதோடு அவற்றைப் பாங்குற விமரிசிக்கும் திறனையும் பெற்றிருப்பான்.
3. தமிழ் நாவல்களின் வகைமைகளை அறிந்து கொள்வதோடு. புத்தம் புது நாவல் வரவுகளை எவ் வகைமைக்குள் அடக்குவது என்ற திறனையும் பெற்றிருப்பர்.
4. புனைகதைக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு தனது வாழ்வியல் சூழலைப் பிரதிபலிக்கும் வகையில் நாவலை எழுதும் திறனை அடைந்திருப்பர்.
5. படைப்பாளிகள் தங்கள் படைப்புக்களில் கையாண்டுள்ள உத்திகளைத் தெளிவுற அறியும் ஆற்றல் பெற்றிருப்பர்.

**கூறு 1.** ஐரோப்பியச் சூழலில் உரைநடை, புனைகதை இலக்கியத்தின் தோற்றம்; அவை பெருமளவில் வளர்ந்து பரவியதற்கான வரலாற்றுச் சூழல் (ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழிற் புரட்சி – நகர்மயமாக்கம் - நடுத்தர வர்க்கம் உருவாதல் – அச்சுத் தொழில் வளர்ச்சி - இதழ்களின் தோற்றம் - வாசிப்புப் பழக்கம் உருவாதல் - சிறுகதை, நாவல் இலக்கியத் தொடக்கம்).

**கூறு 2.** காலனியப் பின்னணியில் இந்தியாவிலும் தமிழிலும் உரைநடை இலக்கியத்தின் தோற்றம் - முன்னெடுத்துச் சென்றவர்கள் - 19ஆம் நூற்றாண்டு இதழ்கள், நூல்கள் - புனைகதையானது இலக்கியமாகப் பரிமாணம் பெறல்.

**கூறு 3.** இயந்திர நாகரிகம் - நவீனமயமாதல் –உலகப் போர்களுக்குப் பின் மேற்குலகில் ஏற்பட்ட சிந்தனை மாற்றங்கள் - அவற்றின் விளைவுகளால் புனைகதை இலக்கியத்தில் நேர்ந்த அமைப்பு மாற்றங்கள் - பரிசோதனை முயற்சிகள்.

**கூறு 4.** நாவல் வளர்ச்சியில் தேக்கநிலை – நாவல் மலர்ச்சியில் தேசிய இயக்கத்தின் பங்களிப்பு. சிறுகதை இலக்கியம்: தோற்றமும் பரவலும் - தேசிய இயக்கத்தின் குறிக்கத்தக்க புனைகதையாளர்களும் அவர்கள் படைப்புகளும் - தமிழில் பல்வேறு இயக்கப் பின்னணியில் உருப்பெற்ற புனைகதை வகைகள் - அதற்கான சான்றுகள்.

**கூறு 5.** நாவல், சிறுகதை உறுப்புகள், புனைகதையில் புனைவும் எதார்த்தமும், படைப்புக்கும் படைப்பாளிக்குமிடையிலான உறவு – படைப்புக்கும் வாசகருக்குமான உறவு – பனுவலும் வாசிப்பு முதன்மையும்.

**பாடநூல்கள்:**

**I. புதினங்கள்:**

1. தி.ஜானகிராமன், ‘அம்மா வந்தாள்’ ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-05.

TAM 2427 புதிய ஊடகங்களும் தமிழும் 4HRS/ 4cr

நோக்கம் : 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கணினி மயப்படுத்தப்பட்ட (Computerized). இணைய வலைப்பின்னல் (Internet) tஅமைப்பிற்குள் செயல்படும். மின்னனுமயமான (Digitalized) ஊடகச் செயல்பாடுகளை அறிமுகப்படுத்தி தமிழில் இப்புதிய ஊடகங்களின் (மின்னஞ்சல், வலைத்தளங்கள், வலைப்பூக்கள், முகநூல், காணொளிக் காட்சிகள் இன்ன பிற) செயல்பாடுகள். அதன் வீச்சு சாதக பாதக அம்சங்கள் ஆகியனவற்றை அறிமுகப்படுத்தியும் விவாதித்தும் மாணவர் அவர்தம் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பிற்கும் இவ்வூடகங்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும்.

கூறு 1: தகவல் யுகத்தின் தோற்றம் - கணினி மற்றும் இணைய வெளிச் செயல்பாடுகள் பற்றிய அறிமுகம் - அறிவு, தொழில், அன்றாட வாழ்க்கை என வாழ்வின் எல்லா நிலைகளிலும் இணையம் இந்த நூற்றாண்டின் தவிர்க்க இயலாத அங்கமாக மாறியுள்ளமை விவாதிக்கப்படும்.

கூறு 2: தமிழ் மொழி மற்றும் இலக்கியம் சார்ந்த இணையச் செயல்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்- உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றான தமிழ் கல்விப்புலம் கடந்து இயங்கிவருவதும் அதன் செயல்பாடுகள் நாளுக்குநாள் விரிவடைந்து வருவதும் விவாதிக்கப்படும்.

கூறு 3: மின்னஞ்சல்(EMail), வலைத்தளங்கள் (Websites)வலைப்பூக்கள் (Blogs) இணைய இதழ்கள்(Internet Magazines) இணைய நூலகங்கள்(Online Resource Centers) இணைய ஆதாரமையங்கள்( Online Resource Centers) ஆகியனவற்றின் செயல்பாடுகளும் பயன்பாடுகளும் அறிமுகப்படுத்தப்படும்.

கூறு 4: 21ஆம் நூற்றாண்டின் காட்சிக் கலாச்சாரத்தில் மின்னனுமயமான பிம்பங்களைப் (Digitalized Images) ' புரிந்து கொள்வதன் அவசியம் பேசப்படும் கற்றல் கற்பித்தலுக்கான ஊடகமாக விளங்கும் காணொளிக்காட்சிகளின் (Vidos) பன்முகச் செயல்பாடுகள் விவாதிக்கப்படும்.

கூறு 5: முகநூல் மற்றுமான சமூக ஊடகங்களின் பின்னுள்ள வணிக நோக்கங்களும், அதனால் உருப்பெறும் புதுவகையான இளையோர் உளவியல் மாற்றங்களும் விவாதிக்கப்படும். விழிப்புணர்வோடு புதிய ஊடகங்களை அணுக வேண்டியதன் தேவை முன்னிறுத்தப்பெறும்.

- இப்பாடத்தின் அக, புற மதிப்பீட்டுத் தேர்வுகள் அனைத்தும் செய்முறைத் தேர்வுகளாக அமையும். தமிழ், ஆங்கிலத் தட்டச்சைத் தேவையான அளவுக்குக் கற்றுக் கொள்ளுதல், மின்னஞ்சல் கணக்குத் தொடங்கி அனுப்புதல், பெறுதல். தேவையான வலைத்தளங்களை கண்டறிதல், தகவல்களைத் தறவிக்கம் செய்தல், வலைப்பூ உருவாக்குதல், படங்கள் காணொளிகளைப் பதிவேற்றம் செய்தல் ஆகியன தனிநபர் மற்றும் குழுப் பணிகளாக (Individual and Group Projects) வழங்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

துணை நூல்கள்

1. James Watson., Media Communication, an Introduction to Theory and Process, 2003 Palgrave, Macmillan.
2. Vilanilam. J.V., Mass Communication in India, a Sociological Perspective, 2008. Sage.
3. Tony Schiratio and Jen Webb., Understanding Visual, 2007, Sage.
4. க.பூர்ணசந்திரன், தொடர்பியல் சமூகம் வாழ்க்கை 2011, அடையாளம் பதிப்பகம்
5. ஞாநி.மீடியா உறவுகள் 2000 ம.சா.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்.

**TAM 2428** **திரைப்படக்கலை** **4HRS/4CR**

நோக்கம் : 20ஆம்நூற்றாண்டின் இணையற்ற கலையான திரைப்படக்கலையைச் சுவைத்தலும், இலக்கியத்திற்கும் திரைப்படத்துக்குமான உறவைப் புரிந்து கொள்ளலும், இலக்கியத்திப்பிரதிகளைத் திரைப்படங்களாக மாற்றும் நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ளலும், கற்றுக் கொண்டவைகளை மனதில் கொண்டு ஒரு சிறுகதையைத் திரைக்கதையாக்கிப் பரிசோதித்துப் பார்த்தலும் இப்பாடத்தின் நோக்கங்களாகும்.

கூறு 1: திரைப்படக்கலையில் கலையும் செய்திறனும் தொழில்நுட்பமும் (Art-Craft Technology) இலக்கியத்திற்கும் திரைப்படத்திற்குமான உறவு - இலக்கியப் பிரதியிலிருந்து திரை வடிவத்திற்கான உருமாற்ற முறைமைகளும் நுணுக்கங்களும்.

கூறு 2: சிறுகதையிலிருந்து உருவான குறும்படங்கள் - மன்ட்டோவின் திற அசோகமித்ரனின் ‘புலிக்கலைஞன்’ பாலுமகேந்திராவின் கதை நேரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 5 குறும்படங்கள்.

கூறு3: சிறுகதை மற்றும் நாவல்களை மூலங்களாகக் கொண்ட முழுநீள வணிகத் திரைப்படங்கள் - உமா சந்திரனின் முள்ளும் மலரும் (மகேந்திரனின் முள்ளும் மலரும்). தமிழ்ச்செல்வனின் வெயிலோடு போய் (சசியின் பூ)

கூறு4: மாணவர்கள் குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குப் பிடித்த காட்சிப்படுத்தலுக்கு உகந்த சிறுகதைகளைத் தேர்தெடுத்து திரைக்கதையாக்குவது.
கூறு5: திரைக்கதையாக்கிய பிரதியை குறும்படமாக்கும் முயற்சியில் ஈடுபடுவது.

இப்பாடம் திரைப்படக்கலைக்கு தேவையான திறன்களைக் கற்றுத் தேர்வதாக இருப்பதால் இதன் அகமதீப்பீட்டுத் தேர்வுகள் 50% தேர்வாகவும் 50% செய்முறையாகவும் அமையும். குழுக்களாக மாணவர்கள் தயாரித்து அளிக்கும் குறும்படங்கள் புறமதிப்பீட்டுத் தேர்வுக்கான படைப்புக்களாகக் கொள்ளப்படும் என்பதால் புறமதிப்பீட்டுத் தேர்வு 100%செய்முறைத் தேர்வாக அமையும்.

பரிந்துரை நூல்கள்

1. Sretilak.S., First Edition Fiction in Films, Films in Fiction. 2007 Vinod Vasishtah
2. Katz st., Film Directing Short by shot, 1991 Michel Wiese Productions
3. சிவகுமார், சினிமா ஓர் அற்புத மொழி 1989 சவுத் விஷன் வெளியீடு
4. பிரபாகர் ஆர். சினிமா ஓர் அறிமுகம் 2006, கனவுப்பட்டறை

**TAM 2429** **பிறமொழி இலக்கியம்** **5 Hrs /4 Cre**

---

**நோக்கம்** : உலகளாவிய அளவில் படைப்பாக்கம் பெற்றுள்ள நவீன இலக்கிய வகைமைகளையும் படைப்புக் கர்த்தாக்களையும் அறிமுகஞ் செய்து, அவற்றின்வழி, பிற மொழிகளில் நிலவிவந்துள்ள இலக்கியப் போக்குகளைத் தமிழ்மொழிவழி அறியச் செய்தல் இப்பாடத்தின் நோக்கமாகும். மேலும், அயல்மொழிப் படைப்புப் பிரதிகளின் பன்முகப்பட்ட பண்புகளை, விதவிதமான கருத்தியற் பொருண்மைகளை அடையாளங்காட்டுதலும், உலக இலக்கியங்கள் மீதான வாசிப்பு ஆர்வத்தை வளரச் செய்தலும் இப்பாடத்தின் பிற நோக்கங்களாகும்.

* பிறமொழிகளிலிருந்து தமிழில் பெயர்க்கப்பட்டு, தென்னிந்திய, இந்திய - ஆசிய - உலக அளவிலான நவீன இலக்கிய வகைமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்திடும் குறிப்பிடத்தக்க நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் இப்பாடத்திற்கான பகுதிகளாக அமைவு பெறும்.

**கற்றலின் பயன்:**

1. உலகளாவிய அளவில் படைப்பாக்கம் பெற்றுள்ள நவீன இலக்கிய வகைமைகளை அடையாளங்கண்டு அவை தமிழ் இலக்கியப் பரப்பில் ஏற்படுத்திய தாக்கங்களை உற்றுநோக்குகிற திறன்களைப் பெற்றிருப்பர்.
2. தென்னிந்திய அளவிலான நவீன இலக்கிய மேதைகளைத் தெரிவு செய்து, அப்படைப்புகளில் உள்ள தனித் தன்மைகளைக் கண்டறியும் திறன்களை அடைந்திருப்பர்.
3. இந்திய அளவிலான நவீனயிலக்கியப் பிரதிகளில் தென்படுகிற தொன்மை, சிறப்புகள் முதலான அம்சங்களைப் பகுத்துப் பார்த்து அவற்றில் தென்படுகிற வாழ்வியல் கூறுகளை வேறுபடுத்தி அறிகிற திறன்களைப் பெற்றிருப்பர்.
4. ஆசிய அளவிலான நவீன இலக்கியப் படைப்புகளானவை, ஏனைய பிற புலங்களின் மீது செலுத்திய தாக்கங்கள் குறித்து மதிப்பீடு செய்கிற ஆற்றலை எய்தியிருப்பர்.
5. உலக இலக்கியச் சிறப்பாம்சங்களை ஒட்டுமொத்தமாகக் கூர்ந்து அவதானித்து, அவற்றைப் போலப் புதிதாகத் தமிழிலும் படைத்திடும் திறன்களை அடைந்திருப்பர்.

**கூறு 1** : மொழிபெயர்ப்பிலக்கிய வாசிப்பு : தேவையும் பயன்பாடுகளும் / உலக - ஆசிய - இந்திய இலக்கியம் : விளக்கமும் விவரணைகளும் / தமிழ் மொழிபெயர்ப்பில் உலக - இந்திய இலக்கிய வகைமைகள் / தமிழிலக்கியப் பரப்பில் அயல்மொழி இலக்கியங்களின் தாக்கமும் பரவலும் / பிறமொழி இலக்கியம் மீதான வாசிப்பு முறைமையும் இரசனை மேம்பாடும்.

**கூறு 2** : தென்னிந்திய இலக்கியம் : இந்திய இலக்கியச் சூழலில் தென்னிந்திய இலக்கியங்களின் தனித்தன்மைகள் / சமகாலப் படைப்பாளிகள் மற்றும் படைப்புகளின் பொதுமைகள்/

**i.**மலையாளம் : நாவல் - வைக்கம் முகமது பஷீர் - என் பால்யகால சகி

சிறுகதை - i. தகழி - மாத்தனின் கதை/

ii. எஸ்.கே. பொற்றேகாட் - ஆற்றங்கரையினிலே/

கவிதை குஞ்ஞுண்ணி - தொழில், மொழி, மரணம் பலவிதம், பீடிதா,

சச்சிதானந்தன் - இரிஞ்ஞாலக்குடா,

ஏ.அய்யப்பன் - இரவு உணவு,

என்.ஜி. ராதாகிருஷ்ணன் - அப்பாவும் நாயும்,

கே.ஜி.சங்கரப்பிள்ளை - பல போஸில் புகைப்படங்கள்.

**ii.** தெலுங்கு : சிறுகதை - பாலகும்மி பத்மராஜு - தொலைபேசி,

கவிதை - சரபண்ட ராஜு - நான் சாட்சிக் கூண்டில் ஏறுகிறேன்,

மகா சுவப்ன - பாட்டை நிறுத்துங்கள் பந்தத்தை அணைத்து விடுங்கள்,

சிகாமணி - கவனியுங்கள்! உருக்குப் பேனா முனைகள் முளைக்கின்றன,

மாத்தூரி நாகேஷ்பாபு - தலித்தாய்.

**iii.** கன்னடம் : சிறுகதை - மாஸ்தி வேங்கடேஸய்யங்கார் - ஆன்சேக்ஸ்பியர்,

கவிதை - பி.ஆர்.லஷ்மணராவ் - நடுநிலை,

வைதேகி - தெரிந்தவர்களே சொல்லுங்கள், பைக்குள்ளே பார்க்கக் கூடாது,

சர்வ மங்களா - அவன் குமரன், பொம்மை.

கூறு 3 : இந்திய இலக்கியம் : தொன்மை, சிறப்பாம்சங்கள் / உலகயிலக்கியப் பரப்பில், இந்திய நவீன இலக்கியத்தின் இடமும் இருப்பும் / இலக்கியத்தினூடான சமூக, வரலாற்று வரைவுகள்/

* நாவல் : வங்கம் - மகாசுவேதாதேவி - 1084இன் அம்மா

* சிறுகதை : **i.** கொங்கணி - தாமோதர் மௌஜோ - மரணத்தை எதிர்நோக்கி,

**ii.**ராஜஸ்தானி - நிருஸின்ஹா ராஜ்புரோகித் - காத்திருத்தல்,

**iii.**டோக்ரி - பி.பி.சாத்தே - அன்பளிப்பு,

**iv.** ஹிந்தி - அசோக் சுக்லா - சைக்கிளைத் திருட்டுக்கொடுத்த சுகம்.

* கவிதைகள் : **i.** வங்கம் - தாகூர் - கீதாஞ்சலி

குதிராம்போஸ் - பத்து மாதங்கள் பத்து நாட்கள்,

சுனில் கங்கோபத்யாயா - நீராவுக்கு உடல்நலக்குறைவு,

**ii.**சமஸ்கிருதம் - ஏ.என். பாண்டே - விருப்பம்,

**iii.** ஹிந்தி - சுஜாதா - சவுதாரிமாலிகா - I, II, III,

- குன்வர் பெச்சைன் - வேறுபாடு,

**iv.** குஜராத்தி - ஜெயந்த் பார்மர் - தூக்குத்தண்டனை.

* கட்டுரை : வங்கம் - பக்கிம் சந்திரர் - பூனை.

கூறு 4 : ஆசிய இலக்கியச் செழுமைகள் / ஏனைய புலங்களின் மீது செலுத்திய தாக்கங்கள்/ நிலவியற் வெளிப்பாட்டுத் தன்மைகள்/

* நாவல் : ருஷ்யா - தாஸ்தயெவ்ஸ்கி - வெண்ணிற இரவுகள்,

* சிறுகதை : **i.** சீனா - துயான் மூ ஹாங் லியாங் - எக்ரெட் ஏரியின் துயரங்கள்,

**ii.** ஜப்பான் - ஹருகி முரகாமி - அமைதி,

**iii.** ருஷ்யா - ஆண்டன் சேகாவ் - பச்சோந்தி,

**iv.** **பாகிஸ்தான்** - சதத் ஹசன் மண்டோ - திற,
**v.** **இலங்கை** - கருணா பெரைரா - இன்று என் மகன் வீடு வருகிறான்.

*** கவிதைகள்** **i.ருஷ்யா** - ரசூல் கம்சதோவ் - காகிதம் பற்றிய கவிதை
**ii.வியட்நாம்** - செலான் வியென் - ஒரு தாயாக இருப்பது குறித்து,
**iii.லெபனான்** - கலில் ஜிப்ரான் - சொத்தைப்பல்,
**iv.பங்களாதேஷ்** - ரஸியாகான் - கொடிய விலங்கு,
**v.சிங்கப்பூர்** - கிபோல்சிங் - சிங்கப்பூர் வருபவர்க்கு,
**vi.மலேசியா** - செசில் ராஜேந்திரா - விலங்குகள் பூச்சிகள் கூட்டம்-1984.

**கூறு 5 :** உலக இலக்கியச் சிறப்பாம்சங்கள்/ உலக இலக்கிய முன்னோடிகள்/ பன்முகப் பண்பாட்டுப் பகிர்வுகள்/ அரசியல் நெருக்கடிசார் வரைவுகள்/ சோதனா முயற்சிகள்/

*** நாவல்** **அமெரிக்கா** - எர்னெஸ்ட் ஹெமிங்வே - கடலும் கிழவனும்,

*** சிறுகதை :** **i.அர்ஜென்டினா**- ஜார்ஜ் லூயி போர்ஹே - மணல் பிரதி,
**ii.கொலம்பியா** - மார்க்வெஸ் - மூழ்கிப்போன மனிதன்,
**iii.** **பிரான்ஸ்** - ஆல்பர்ட் காம்யு - விருந்தாளி,
**iv.** **ஜெர்மனி** - ராபர்ட் நியூமான் - துறவி,

*** கவிதைகள் :** **i.அமெரிக்கா** - வால்ட் விட்மன் - புல்லின் இதழ்கள்,
- ரேடூரம் - துயரம் நிறைந்த கண்ணீர்,
- ஸ்டர்லிங் ப்ரவீன் - கிழவன் லெம்,
- பார்பரா மால்கம் - தூங்கப்பண்ண அம்மா சொன்ன கதை
**ii.ப்ரெஞ்சு** - ரூமர்கோடன் - சில அபூர்வமான மௌனப் பிரார்த்தனைகள்
**iii.சிலி** - பாப்லோ நெரூடா - புத்தகத்திற்கு ஒரு விளிப்பாடல்,
**iv.நியூசிலாந்து** - ஜேம்ஸ் நார்க்ளிஃப் - சோப்பின் உண்மைக் கதை,
**v.இங்கிலாந்து** - எட்வின் ப்ராக் - மனிதனைக் கொல்ல ஐந்து வழிகள்.

*** கட்டுரைகள்** **i.மெக்ஸிகோ** - ஆக்டோவியா பாஸ் - மொழிபெயர்ப்பு என்ற கலை,
**ii.நைஜீரியா** - ச்சினுவா ஆச்சிபி - நான் குளிக்கப் போவது இல்லை.

**பாடநூல்கள்**

*** நாவல்கள் :**

1. வைக்கம் முகமது பஷீர், பால்ய கால சகி, தமிழில் : குளச்சல் மு.யூசுப், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 629 001, முதல் பதிப்பு - டிசம். 2009. விலை : 60
2. மகாசுவேதாதேவி, 1084இன் அம்மா, பரிசல் பதிப்பகம், சென்னை, விலை. ரூ60.
3. தாஸ்தயெவ்ஸ்கி, வெண்ணிற இரவுகள், என்.சி.பி.ஹெச்., சென்னை, விலை. ரூ60.
4. எர்னெஸ்ட் ஹெமிங்வே (நூ.ஆ.), எம்.எஸ். (மொ.பெ.ஆ.), கிழவனும் கடலும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் - 001, முதல் பதிப்பு - 2003. விலை : 50

**TAM2430** **சித்தர் நெறி** **5 Hrs /4 Credits**

**நோக்கம்** : சித்தர் பாடல்களை வகைப்படுத்தி அறிமுகப்படுத்துதல், அவற்றின்வழி சித்தர்களின் பன்முகப் பல்துறை அறிவை வெளிப்படுத்துதல், அவர்களின் ஒற்றை இலக்கான மெய்ப்பொருளை இனம் காட்டுதல், அதை அடையும் தடைகளைத் தவிர்க்க வேண்டுதல், சமூக இழிநிலைகளைச் சாடுதல், அன்னபிறவும் எடுத்துரைத்தல் இப்பாடத்தின் நோக்கமாகும்.

**கூறு 1:** அடிப்படைத் தத்துவம் : அண்டம் பிண்டம் (ஐம்பூதங்கள்) - மனித உயிர் மேம்பாடு - தன்னையறிதல் - இறைவயமாதல் - சித்தர் சொன்மை, பொருண்மை விளக்கம் - எண்ணிக்கை, வகை - வரலாறு - பாடல்களின் வகைகள் - பல்துறை அறிவு - உறுதிமெய்ப்பொருள்.

**கூறு 2:** பன்முகப் பல்துறை அறிவு : மருத்துவயியல் - அண்டவியல் - வேதியல் - தாவரவியல் - விலங்கியல் - உளவியல் - சமூகவியல் - சோதிடவியல் - இரசவாதவியல், அன்னபிற துறைகளில் ஈடுபட்ட நிலைகள்.

**கூறு 3:** மருத்துவ முறை : உடம்பை வளர்த்து உயிர் வளர்த்தல் - உடலியல் - நோய் எண்ணிக்கை - வகை - நோயறியும் முறை - நோய் தீர்க்கும் அக, புற மருந்து வகை - அதன் அமைவு முறை - மூலிகை முதல் செந்தூரம் வரையிலான மருந்துகள் - அன்ன பிறவும்.

**கூறு 4:** யோகம் - விளக்கம் - எண்வகை யோகங்கள் - பத்துவகைக் காற்றுகள் - பத்துவகை நாடிகள் - ஆறு ஆதாரங்கள் - அவை செயல்படும் முறை - விளக்கம் - குண்டலி யோகம் - ஆதனம் - முத்திரைகள் துணைநிற்றல் - உறுதிமெய்ப்பொருள் அறிதல் - எண்வகைக் சித்துக்களைப் பெறுதல் - ஞான நிலையை அடைதல்.

**கூறு 5:** சித்தர் குறித்த பதிவுகளை மதிப்பிடுதல் : தலம் - கோயில் - கடவுள் - உருவ வழிபாடு - புனிதநீர் - வேள்வி - பூசை - சடங்குகள் - புராணம் - சாத்திரம் - சாதி, மத, இன, பால்வேறுபாடுகள் - தீண்டாமை - மூடநம்பிக்கைகள் - பெண் - குறியீட்டு மொழி - உயர்சாதி எதிர்ப்பு - நாத்திகம் அன்னபிறவும் சாடுதலை ஆழ்ந்து அகன்று, நுணுகித் திறனாய்தல்.

**பாடநூல்** :


1. ராமநாதன்,அரு.(பதி.), சித்தர் பெரிய ஞானக் கோவை என வழங்கும் சித்தர் பாடல்கள், பிரேமா பிரசுரம், சென்னை, நான்காம் பதிப்பு, 1984.


**பார்வை நூல்கள்**


1. கமலக்கண்ணன்,பா., சித்தர் தத்துவம், வானதி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2010.
2. குப்புசாமி முதலியார்,க.நா., சித்த மருத்துவம், தொகுதி ஒன்று, அரசு அச்சகம், சென்னை, 1954.
3. கோவேந்தன்,த., சித்தர் பாடல்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1976.
4. சிதம்பரனார்,சாமி., சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம், இலக்கிய நிலையம், சென்னை, நான்காம் பதிப்பு 1974.
5. சோமு,மீ.ப., சித்தர் இலக்கியம், மூன்று தொகுதிகள், அண்ணாமலை நகர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1988.
6. நாராயணன்,க., சித்தர் தத்துவம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1985.
7. பசுபதி, K.R., சித்தர்கள், புதுப்புனல் பதிப்பகம், திருச்சி, 1963.
8. மாணிக்கவாசகம்,இரா., நம்நாட்டுச் சித்தர்கள், அன்னை அபிராமி அருள், சென்னை, 1982.
9. ராமச்சந்திரன்,எஸ்,பி.(பதி.), யோக ஞான சாஸ்திரத்திரட்டு, ஒன்பது தொகுதிகள், தாமரை நூலகம், சென்னை, 1995.
10. Arunachalam, M., The Siddha Culture in Tamilnadu, Bulletin of the Institute of Traditional Cultures, University of Madras, Madras, 1977.
11. Ganapathy, T.N., The Philosophy of the Tamil Siddhas, Indian Council of Philosophical Research, New Delhi, 1993.
12. Zvelebil Kamil,V., The Poets of the Powers , Rida & Co, London, 1973.

**TAM 2524** இயக்கமும் இலக்கியமும் **5 Hrs /5 Cre**

---

**நோக்கம்** :

உலகளாவிய அரசியல், சமூக, இலக்கிய இயக்கங்களின் உந்துதல்களால் உருப்பெற்று வளர்ந்துள்ள, வேறுபட்ட இலக்கியப் போக்குகளுள் குறிக்கத்தக்க சிலவற்றை, அவ்வவ் இயக்கங்களின் பின்னணியில் கண்டு விளங்கிக் கொள்வதே இப்பாடத்தின் நோக்கமாகும். பன்முகப்பட்ட இயக்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்திடும் நாவல், சிறுகதைகள், கவிதைகள், நாடகம் முதலான இலக்கிய வகைமைகள் இப்பாடத்திட்டத்தினுள் இடம்பெறும்.

**கற்றலின் பயன்:**

1. உலகளாவிய ரீதியில் அரசியல், சமூக, பொருளாதார, இலக்கிய இயக்கங்களின் உந்துதல்களால் உருப்பெற்று வந்துள்ள நவீன இலக்கிய வகைமைகளை அடையாளங்கண்டு பயிலும் திறன்களைப் பெற்றிருப்பர்.
2. இந்திய- தமிழக அளவிலான அரசியலில் தொடங்கி, இலக்கியத்தினுள் நுழைந்த இயக்கங்களை ஒப்பிட்டு அவற்றிற்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை அறிகிற திறன்களை எய்தியிருப்பர்.
3. மேலைத்தேயக் கோட்பாடுகளின் தாக்கத்தால் இந்திய- தமிழகப் பரப்பில் உருப்பெற்ற கோட்பாடுகளைத் தேர்வு செய்து அவற்றை நவீனத் தமிழ்ப் புனைவுப் பிரதிகளோடு பொருத்திப் பார்க்கிற திறன்களை அடைந்திருப்பர்.
4. தமிழிலக்கியப் பரப்பில் தொடக்க காலத்தில் பரவிய, மேற்கத்திய இலக்கியக் கோட்பாடுகளின் தன்மைகள் குறித்துப் பகுத்துப் பார்த்து அவற்றிற்கிடையிலான தன்மைகளை வேறுபடுத்தி அறிகிற திறன்களைப் பெற்றிருப்பர்.
5. சமகாலத் தமிழிலக்கியச் சூழலில் பரவிய மேலையிலக்கியக் கோட்பாடுகளின் தன்மைகள் குறித்துத் திறனாய்கின்ற திறனையும், நவீனத் தமிழிலக்கியப் பிரதிகளிலிருந்து புதிதாக ஒரு கோட்பாட்டை உருவாக்குகிற ஆற்றலையும் அடைந்திருப்பர்.

**பாடத்திட்டம்** :

**கூறு 1** : i.இயக்கம்/இலக்கியம்/கொள்கை/கோட்பாடு/தத்துவம்: விளக்கமும் விவரணைகளும். ii.இயக்கம்சார் இலக்கியங்களும் இலக்கியப் பனுவல்களுள் இயக்கங்களின் ஊடாட்டமும்.

**கூறு 2** : இந்திய - தமிழக அளவில் அரசியற் களங்களில் முகிழ்த்து, இலக்கியப் பிரதிகளுக்குள் இழைவுற்ற இயக்கங்கள்:

**I.காந்தியம்** - i. பிரார்த்தனை (சி.சு.செல்லப்பா)

ii. பதச்சோறு (பி.எஸ். ராமையா)

iii. கங்கை இன்னும் வற்றிவிடவில்லை (நா.பார்த்தசாரதி)

**II.பெரியாரியம்** - i. கருப்பணசாமி யோசிக்கிறார், ii. சொர்க்கத்தில் நரகம், iii.செவ்வாழை (அறிஞர் அண்ணா)

**கூறு 3 :** மேலைதேயக் கோட்பாடுகளின் தாக்கத்தால் இந்திய - தமிழக இலக்கியச் சூழலில் உருப்பெற்ற சிந்தனாவாக்கங்கள்:

**I.தலித்தியம்** - i. மெல்லிய புலால் நாற்றம், ii. செத்துப்போன மாட்டைத் தோலுரிக்கும்போது,

iii. தீண்டப்படாத முத்தம் (சுகிர்தராணி).

iv. நாம் என்பது, v. பறை (கரிகாலன்).

**II.பெண்ணியம்** - i. பெண், ii. தீட்டு, iii.யாரும் சொல்லித்தராமல் (அ.வெண்ணிலா),

iv. காட்ஸில்லா (வைகைச்செல்வி), v. அவர்கள் பார்வையில் (அ.சங்கரி), vi. சுதந்திர அடிமைகள் (வித்யா), vii. புரிதலின் அவலம், viii. உன் தனிமை (ரஞ்சனி). ix. வளையல் விலங்குகள், x. ஆகாசம் பார்த்ததில்லை, xi. கயிறு, xii. கோடிவருட நெருப்பை xiii.சாவி (கந்தர்வன்).

**கூறு 4 :** தமிழிலக்கியப் பரப்பில், தொடக்ககாலத்தைய மேற்கத்திய இலக்கியக் கோட்பாட்டுப் பரவல்கள்:

**I.புனைவியல்** - i. மழை, ii. பிழைத்த தென்னந்தோப்பு, iii. காற்று,

iv. விடுதலை (நாடகம்) - (பாரதியார்).

**II.எதார்த்தவாதம்**- i. கெடுக சிந்தை (த.கோவிந்தன்), ii. வெறும் மனைவி (சுப்ரமணியராஜு), iii. வேளை வரலை (பாலகுமாரன்), iv. நவயுகக் காதல் (மீரா), v. நாய்களே அஜாக்கிரதை அல்லது அஜாக்கிரதை நாய்கள் (ஆதவன் தீட்சண்யா), vi.உன் மகளை உன் மகனே (இரா.மீனாட்சி).

**III. மிகை எதார்த்தவாதம்**- i. தவளைகள் (ஞானக்கூத்தன்), ii. நிலவின் இதயத்தாளம் (பிரம்மராஜன்), iii. ஒரு நம்பிக்கை செத்துக்கிடக்கிறது, iv. ஒருமுறையாவது பூக்கும் (அபி).

**IV. இயற்பண்பியல்வாதம்**- i. கிளிக்குஞ்சு, ii. காட்டு வாத்து (ந.பிச்சமூர்த்தி), iii. நீலக்கடல், iv. ஜன்னல் (அப்பாஸ்).

**V. குறியீட்டியல்**- i. லெவல் கிராஸிங் (நாரணோ ஜெயராமன்), ii. என்வீட்டுப் பரண்பொருள் (தேவதச்சன்),

**VI.இருத்தலியவாதம்** - i. இல்லாமல் இருப்பது, ii. எல்லைகள், iii. ஸ்டேசன், iv. சுருதி, v. சந்தை, vi. பிரயாண அனுபவம், vii. வேறு (நகுலன்), viii. அனுபவம், ix. சாவு -1, x. காலம் தாழ்ந்த பின் வந்தவன், xi. மரம், xii. சாவு -2, xiii. இல்லாதது (க.நா.சு.).

**VII.மார்க்சியம்** - i. மலரும் சருகும் (டி.செல்வராஜ்).

**கூறு 5 :** சமகாலத் தமிழிலக்கியச் சூழலில், மேலைதேய நவீன கோட்பாட்டு வரவுகள்:

**I. நவீனத்துவம்** - சீதைமார்க் சீகைக்காய்த்தூள் (சுந்தரராமசாமி).

**II. பின் நவீனத்துவம்** - வாள் உருவப்படும்முன் போர் முடிந்த கதை (மண்பூதம்), வா.மு.கோமு.

**III. சூழலியம்** - முன்பொரு காலத்தில் நூற்று எட்டுக் கிளிகள் இருந்தன (பிரேம்- ரமேஷ்)

**IV. மாந்திரிக எதார்த்தவாதம்** - டார்த்தினியம் (திசைகளின் நடுவே), (ஜெயமோகன்)

**V. பின்காலனித்துவம்** - காக்கா கதை (புலிப்பாணி ஜோதிடர் - கால பைரவன்)

**பாடநூல்கள்**

i. டி.செல்வராஜ், மலரும் சருகும், சித்திரை நிலவு வெளியீடு, மதுரை - 1, முதற்பதிப்பு - செப்டம்பர் 2013.

ii. பலவேறுபட்ட நூல்களுள் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகள் குறித்த விளக்கப் பகுதிகள், சிறுகதைகள், கவிதைகள், நாடகம் ஆகியவற்றின் நகல்கள் அடங்கிய தொகுப்பு.

**TAM 2533** **கவிதை – இறைநெறி** **5Hr/5Cre**

---

நோக்கம்:

தொல் பழங்காலம் முதல் பாரதியார் காலம் வரை தமிழர்களின் இறை பற்றிய கருத்தாக்கத்தை அந்தந்தக் காலங்களின் கவிதைகள் கொண்டு அணுகுவது இந்தப் பாடத்திட்டத்தின் நோக்கம்.

**கற்றலின் பயன்:**

1. கவிதை தோன்றுதவற்கு முன் இருந்த வழிபாட்டு முறைகளையும் அதன் வளர்ச்சியையும் நிரல்படுத்தும் திறன் பெற்றிருப்பர்.
2. பல்வேறு சமயங்களின் கொள்கைகளையும், அவற்றிக்கிடையேயுள்ள இனக்கத்தையும் இனக்கமின்மையையும் தமிழ்ச் சமூகத்தில் அவை ஏற்படுத்திய தாக்கத்தினையும், இலக்கியங்கள்வழி புரிந்துகொள்ளும் ஆற்றல் பெற்றிருப்பர்.
3. இப்பாடம் வழங்கிய சமய அறிவைப் பயன்படுத்தித் தமிழகத்தின் பல்வேறு வழிபாட்டுத் தலங்களின் நடைமுறையை வெளிநாட்டினர்க்கு எடுத்துரைக்கும் வன்மை பெற்றிருப்பர்.
4. சமங் நல்லிணக்கத்திற்கு உகந்த வகையில் இலக்கியங்களைப் பயன்படுத்தித் திட்டமிடும் ஆளுமையையும் நடைமுறைப்படுத்தும் திறனையும் பெற்றிருப்பர்.
5. தற்சார்பின்றிப் புறவய நிலையில் சமய இலக்கியத்தை மதிப்பிடும் திறன் பெற்றிருப்பர்.

**கூறுகள்**

1. தொல் பழங்கால இறை வழிபாடு – நிலமும் தெய்வங்களும் – கொடிநிலை, கந்தழி, வள்ளி, நடுகல் வழிபாடு, வேலன் வெறியாட்டு, கொற்றவை வழிபாடு. இறைவனுக்கு என்று தனி இலக்கியம் தோன்றுதல் – திருமுருகாற்றுப்படை – பரிபாடல்.
2. சமண சமயத்தின் தாக்கம் – அதன் செல்வாக்கு, கொள்கைகள் – சிலப்பதிகாரம். பௌத்த சமயத்தின் தாக்கம் – அதன் செல்வாக்கு, கொள்கைகள் – மணிமேகலை.
3. வழிபாட்டில் சிவனும் திருமாலும் முக்கிய இடம் பெறுதல். காரைக்கால் அம்மையார், முதலாழ்வார்கள் மூவர். தலந்தோறும் இறைவனை வழிபடல் (திருமுறைத் தலங்கள் – மங்களாசாசனம் பெற்ற தலங்கள் – வைப்புத் தலங்கள் ஆகியவை). பக்தி இலக்கியத்தில் தமிழ் அகமரபு இடம் பெறல் – நாயகன் நாயகி பாவம். இறைவனை அரசனாகவும் குழந்தையாகவும் பாவித்தல். இசையும் தமிழ்க் கவிதையும் இணையும் பாங்கு – பண்ணொடு பாடுதல். சைவத்தில் சாத்திர நூல்கள் தோன்றுதல்.
4. ஞான வழி இறைவனை அடைதல் – திருமூலர், தாயுமானவர், வள்ளலார். சித்தர்கள் கருத்தாக்கம் – குறியீட்டு மொழிக் கொள்கை, உலக வாழ்வில் வெறுப்பு, பெண்ணாசை வெறுப்பு, இறைவனை அகத்தில் தேடுதல் போன்றவை. கிறித்தவம், இஸ்லாத்தின் வரவு – வீரமாமுனிவர், குணங்குடி மஸ்தான்.
5. நாட்டார் சமய மரபு – அதன் செல்வாக்கு, கொள்கைகள். கதைப்பாடல், கும்மிப்பாடல், அம்மானை, வர்ணனைப் பாடல்கள் ஆகியன. பாரதியாரின் இறை பாடல்கள் – நாட்டார் மரபின் தாக்கம். சித்தர் இலக்கியத்தின் செல்வாக்கு ஆகியவை.

**பார்வை நூல்கள்**

1. அருணாசலம். ப., பக்தி இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1995.

**TAM 3209** **போட்டித் தேர்வுத் தமிழ்** **3 Hrs./Cr. 2**

**நோக்கம்: அரசுப் பணி போட்டித் தேர்வு எழுதும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் கொள்குறி நிலையில் (objective type) கற்றலே இப்பாடத்தின் நோக்கமாகும்.**

அலகு1: தமிழ் இலக்கிய வரலாறு (நூல்களும் ஆசிரியர்களும், அடைமொழியால் குறிக்கப்பெறும் நூல்கள், புலவர்கள், இலக்கியவாதிகள், தமிழ் இலக்கிய நூலின் புகழ் பெற்ற மேற்கோள்கள், விருது பெற்ற ஆசிரியர்கள், நூல்கள்)

அலகு2: அகரவரிசைப்படி சொற்களைச் சீர் செய்தல், பிரித்து எழுதுதல், சேர்த்து எழுதுதல், எதிர்ச்சொல், பொருந்தாச் சொல், உவமைக்கேற்றப் பொருளைக் கண்டறிதல்.

அலகு3: வாக்கிய வகைகளை அறிதல், (தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை) விடைக்கேற்ற வினாவைத் தேர்வு செய்தல், எதுகை, மோனை இயைபுத் தொடர்களைக் கண்டறிதல்.

அலகு4: சந்திப்பிழை நீக்கம், பிறமொழிச் சொற்கள் நீக்கம், ஒருமை - பன்மை அறிதல், ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தருதல் , பொருத்துதல், சரியா? தவறா? என அறிதல்.

அலகு5: இலக்கணக் குறிப்பு அறிதல், ஓரெழுத்து ஒருமொழி, வேர்ச் சொல் அறிதல், சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடரைக் கண்டறிதல், ஒலி வேறுபாடு அறிந்து சொற்களுக்கேற்ப பொருள் காணுதல்.



**பார்வை நூல்கள்**

1. மு.வரதராசனார் - தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாடமி வெளியீடு, முதற்பதிப்பு – 1990.
2. மது.ச.விமலானந்தன், தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம் I,II, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை – 05. முதற்பதிப்பு – 1987.
3. அ.கா. பெருமாள், எஸ். ஸ்ரீகுமார், தமிழ் இலக்கிய வரலாறு, நிர்மால்யம் பதிப்பகம், நாகர்கோவில் - 629 001. நான்காம் பதிப்பு - 2003.
4. சொ.பரமசிவம், நற்றமிழ் இலக்கணம், கவிக்குயில் பிரிண்டர்ஸ், சென்னை, 2000.
5. எம்.ஏ.நு.்.மான், அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம், திருச்சி, 2007.
6. ஜே.ப.குமரன், தமிழ் இலக்கணம் ஓர் எளிய அறிமுகம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2003.